# ஒன்ட்டேரியோவில் குடியமரவும்

ஒன்ட்டேரியோவிற்குச் சென்று குடியமர்வது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தும்.

# இந்தப் பக்கத்தில்


1. Open a bank account (ஒரு வங்கிக் கணக்கு துவக்கவும்)
2. Find housing (வீடு ஒன்று பார்த்துக்கொள்ளவும்)
3. Learn English and French (ஆங்கிலம் மற்றும் ஃப்ரெஞ்சு மொழி கற்கவும்)
4. Find a job (ஒரு வேலை தேடிக்கொள்ளவும்)
5. Enrol your children in school (உங்கள் பிள்ளைகளை பள்ளியில் சேர்க்கவும்)
6. Find child care (குழந்தைப் பராமரிப்பு தேடிப்பிடிக்கவும்)
7. Get health care (உடல் நலப் பராமரிப்பு பெறவும்)
8. Get a driver’s licence (ஓட்டுனர் உரிமம் பெறவும்_
9. Transportation (போக்குவரத்து)
10. Who to call during an emergency (ஒரு அவசர நிலை எனும்போது யாரை அழைப்பது)


---

## ஒரு வங்கிக் கணக்கு துவக்கவும்Open a bank account

உங்கள் பணத்தைக் கையாளுவதையும் மற்றும் பத்திரமாக அதனை வைப்பதற்கும் ஒரு வங்கிக் கணக்கு எளிதாக்குகிறது .

உங்களுக்கென ஒரு முகவரி, வேலை இல்லையென்றாலும் அல்லது கணக்கில் போடுவதற்காக உடனடியாக பணம் எதுவும் இல்லையானாலும்கூட ஒரு வங்கிக் கணக்கினைத் துவக்கலாம்.

ஒரு வங்கிக் கணக்கினைத் துவக்க:

1. acceptable, original identification (ஏற்றுக்கொள்ளத்தக்க, அசல் அடையாளம்) ஆகியவற்றின் குறைந்தது இரண்டு வகைகளைக் கண்டறியவும் (**வங்கியினர் புகைப்பட பிரதிகளை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்**)
2. வங்கியைத் தேர்ந்தெடுக்கவும்
3. வங்கிக்கு நேரடியாகச் செல்லவும்
4. புதிதாக ஒரு கணக்கு துவக்க விரும்புவதாக அவர்களிடம் கூறவும்

கணக்கு துவக்கப்பட்ட உடனேயே, **ஒரு காசோலைப் புத்தகம் கேட்டுப்பெறுவதை உறுதி செய்யவும்**. ஒரு வீட்டுக்காக அல்லது வாடகை செலுத்துவதற்கான தொகையை நீங்கள் வைப்பு செய்ய வேண்டியிருக்கலாம்.

இவை பற்றி மேலும் தெரிந்துகொள்ளவும்:

- how to open a bank account (ஒரு வங்கிக் கணக்கை துவக்குவது எப்படி)
- your rights and responsibilities when dealing with banks (வங்கிகளுடன் பரிவர்த்தனை செய்கையில் உங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்)

---

# வீடு பார்த்துக்கொள்ளவும்

நீங்கள் வாடகைக்கு வீடு எடுக்கலாம், சொந்தமாக வாங்கலாம் அல்லது நிரந்தரமாக வசிப்பதற்கான ஒரு இடம் தேடிப்பிடிக்கும் வரை அவசர நிலை வீடு ஒன்றை பிடிக்கலாம்.

## அவசரநிலை வீடு பிடித்தல்

உங்களுக்கு அவசர நிலை வீடு பிடிக்கத் தெவையானால், இவற்றில் ஒன்றை நாடவும்:

1. Settlement.org

2. ஆன்லைனில் Housing Help Association of Ontario (ஹவுஸிங் ஹெல்ப் அசோசியேஷன் ஆ்ப் ஒன் ட்டேரியோ) , அல்லது :
    - தொலைபேசி எண் : 905-526-8100 வழியாக
    - email (மின்னஞ்சல் வழியாக)

## வாடகைக்கு எடுத்தல்

வாடகைக்கான வீடு பிடிப்பதற்கான பல இடங்கள் ஒன்ட்டேரியோவில் உள்ளன, இவற்றில் அடங்குபவை:

- இணைய தளத்தில் மற்றும் வாடகை வீடு பற்றிய வெளியீடுகளில் கிளாஸ்ஸி்பைடு பிரிவுகளில் தேடுவதன் மூலம்
- நிலபுலன் வகை ஏஜெண்ட் ஒருவருடன் பேசுவதன் மூலம்
- மளிகைக்கடைகள், நூலகங்கள், லாண்டரி கடைகள், மருத்துவ மனிகள், கடன் வழங்கும் இடங்கள், சமுதாய கூடங்கள், சேவையளிக்கும் கிளப்கள் அல்லது நிலபுலன் வகை அலுவலகங்களின் அறிவிப்புப் பலகைகளில் பார்ப்பதன் மூலம்
- உறவினர்கள் அல்லது சக பணியாளர்களிடம் பேசுவதன் மூலம்

வாடகைக்கு வீடு எடுப்பது என நீங்கள் முடிவு செய்தால், நீங்கள்:

1. வாடகைப் படிவம் ஒன்றை நிரப்பி வீட்டின் சொந்தக்காரரிடம் சமர்ப்பிக்கவும்
2. வாடகை ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடவும், இது உங்களுக்கும் நீங்கள் வாடகைக்கு எடுக்கும் வீட்டின் சொந்தக்காரருக்கும் இடையிலான சட்டப்படியான ஒப்பந்தமாகும், இதில் வாடகை எவ்வளவு என்பதும் உங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புக்களும் அடங்கும்.
3. ஒரு வைப்புத்தொகை கொடுக்கவும், இது வழக்கமாக, ரொக்கமாகவோ அல்லது காசோலையாகவோ இருக்கும்; இது முதல் மற்றும் கடைசி மாத வாடகைப்பணமாக இருக்கும்
4. ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பிட்ட தேதியில் உங்கள் வாடகைப் பணத்தை வீட்டின் சொந்தக்காரருக்கு செலுத்தவும் (வழக்கமாகவே ஒரு காசோலை வடிவில்)

இன்னும் இவை பற்றி தெரிந்து கொள்ளவும்:

- renting your first home in Canada (கனடா நாட்டில் உங்கள் முதலாவது வீட்டை வாடகைக்கு எடுத்தல்) (PDF)
- how much it costs to rent an apartment in Ontario (ஒன்ட்டேரியோவில் வாடகைக்கு எடுப்பதற்கு எவ்வளவு செலவாகிறது)
- your rights as a tenant in Ontario (வாடகைக்கு குடியிருப்பவராக உங்களுடைய உரிமைகள்

### சொந்தமாக வீடு வாங்குதல்

கனடா நாட்டில், வீடு வாங்குவது என்பது the Canada Mortgage and Housing Corporation (கனடா மார்ட்கேஜ் அண்ட் ஹவுஸிங் கார்ப்பொரேஷன்)-இனால் கட்டுப்படுத்தப்படுகிறது

நீங்கள் சொந்தமாக வீடு வாங்க முடிவு செய்தால், நீங்கள் **பின் வரும் இரண்டில் ஒன்றை** நிறைவேற்ற வேண்டும்:

- வீட்டின் முழு விலையை, அதற்கான கட்டணங்கள் மற்றும் வரிகள் உட்பட முழுதாகச் செலுத்திவிட வேண்டும்
- வீடு வாங்குவதற்காக வங்கியில் கடன் வாங்கவேண்டும் **மற்றும்** இவற்றுக்கும் பணம் கையிருப்பு வைத்திருக்க வேண்டும் :
    - வீட்டின் விலைக்கு பணம் செலுத்த, கையிருப்பு முன் பணம்
    - அனைத்து கட்டணங்கள் மற்றும் வரிகள்

இவை பற்றி இன்னும் தெரிந்து கொள்ளவும்:

- home-buying in Canada (கனடா நாட்டில் சொந்தமாக வீடு வாங்குதல்)
- what to know before buying a home in Ontario (ஒன்ட்டேரியோவில் சொந்தமாக வீடு வாங்குவதற்கு முன்னர் தெரிந்து கொள்ளவேண்டியவை எவை)

---

## ஆங்கிலம் மற்றும் ஃப்ரெஞ்சு மொழி தெரிந்துகொள்ளவும்

ஒன்ட்டேரியோவிற்கு நீங்கள் செல்லும் முன்னதாக test or improve your English and French language skills (உங்கள் ஆங்கில மற்றும் ஃப்ரெஞ்சு மொழி

புலமையை சோதித்துக் கொள்ளவும் மேம்படுத்துவதற்காகவும்), உதவி புரியும் வகையில் பல எண்ணிக்கையிலான திட்டங்கள் உள்ளன.

---

# ஒரு வேலை தேடிக்கொள்ளவும்

பின் வரும் காரியங்களில் உங்களுக்கு உதவக்கூடிய  அரசு நிதி உதவி பெறுகின்ற திட்டங்கள், சமுதாய மையங்கள் மற்றும் settlement agencies (குடியமர்த்தல் ஏஜென்சிகள்) பலவும் உள்ளன:

- வேலை தேடுதல்
- உங்கள் சுய விபரக் கோவை மற்றும் நேர்காணலை எதிர்கொள்ளும் திறன்களை மேம்படுத்துதல்
- வெற்றி பெறுவதற்கான கனடா நாட்டு அனுபவம் மற்றும் திறன்களை அடைதல்

jobs and employment in Ontario (ஒன்ட்டேரியோவில் வேலைகள் மற்றும் வேலை வாய்ப்பு) பற்றி இன்னும் தெரிந்து கொள்ளவும்

---

# உங்கள் பிள்ளைகளை பள்ளியில் சேர்க்கவும்

ஒன்ட்டேரியோவில் :

- 6-18 **வயதுக்கிடையிலான அனைத்து குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும்** (அரசு நிதி பெறுகின்றபள்ளி, அல்லது தனியார் அல்லது வீட்டுப் பள்ளியில் எதிலாவது)
- பெரும்பாலான குழந்தைகள் தங்களுடைய அல்லது தங்கள் பெற்றோரின் குடியமர்வு நிலை ஒரு பொருட்டில்லாமல், அரசு நிதி பெறுகின்றபள்ளியில் சேரலாம் (மேலும் குறிப்பாக தகவல்களுக்கு உங்கள் உள்ளூர் school board (பள்ளி வாரியத்தினை) தொடர்பு கொள்ளவும்)
- தனியார் பள்ளிகள்  படிப்பதற்காக ஒரு கட்டணம் வசூலிக்கின்றனர்

### அரசு பள்ளிகள்

அரசு நிதி பெறுகின்றபள்ளிக் கல்வி  அமைப்பனது மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. **Elementary school(ஆரம்பப் பள்ளி)**
   - ஆங்கிலம், ஃப்ரெஞ்சு மொழியில் ஒரு விருப்பம் மற்றும்/அல்லது கத்தோலிக்க கல்வி
   - குறிப்பாகவே மழலையர் வகுப்பில் ஆரம்பித்து கிரேடு 8 வரை
   - மாணவர்கள்:
     - படித்தல், எழுதுதல், மற்றும் கணக்கிற்கான அடித்தளத்தினை புரிந்துகொள்வார்கள்
2. **Secondary school (இரண்டாம் நிலைப் பள்ளி)**
   - ஆங்கிலம், ஃப்ரெஞ்சு மொழியில் ஒரு விருப்பம் மற்றும்/அல்லது கத்தோலிக்க கல்வி
   - குறிப்பாகவே கிரேடு 9 இல் ஆரம்பித்து கிரேடு 12 வரை
   - மாணவர்கள்:
     - தங்களுக்கான விருப்பங்களில் கவனம் செலுத்தி பட்டம் பெறுதல் மற்றும் அதற்கு அப்பால் செல்ல தங்களைத் தயார்ப் படுத்திக்கொள்வார்கள்
3. **Post-secondary school(உயர் நிலைப் பள்ளி)**
   - அனைத்து வயதினருக்கும் கல்லூரி, பல்கலைக்கழகம் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்காக
   - **உங்களுடைய கல்விக்கட்டணம் மற்றும் புத்தகங்களுக்காக நீங்கள் பணம் செலுத்த வேண்டும்** என்றாலும் apply for grants and loans to help you pay for university or college (பல்கலைக்கழகம் அல்லது கல்லூரிக்காக நீங்கள் கட்டணம் செலுத்துவதில் உதவுவதற்காக மானியங்கள் மற்றும் கடன்களுக்காக ஒன் ட்டேரியோ மாணவர் உதவித் திட்டம் [Ontario Student Assistance Program ](OSAP)மூலமாக நீங்கள் விண்ணப்பிக்கலாம்

இவை பற்றி இன்னும் தெரிந்துகொள்ளவும்:

- how to enrol your child in school (பள்ளியில் உங்கள் குழந்தையைச் சேர்ப்பது எப்படி

- find elementary and secondary schools in your community (உங்கள் சமுதாயத்திற்குள்ளாகவே ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பள்ளிகளைக் கண்டுபிடிக்கவும்
- full-day kindergarten for children aged 4 and 5 (4 மற்றும் 5 வயது கொண்ட குழந்தைகளுக்கான முழு நாள் மழலையர் பள்ளி)
- key dates in the school year, including holidays (பள்ளியின் ஒரு வருட காலத்திய முக்கிய தேதிகள்)(ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பள்ளிகளுக்காக)
- going to college or university in Ontario (ஒன்ட்டேரியோவில் கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்திற்கு செல்லுதல்)

### தனியார் பள்ளிகள்

**தனியார் பள்ளிகளில் சேர்ப்பதற்காக அரசு பணம் எதுவும் .** அதற்காக நீங்கள்தான் உங்கள் சொந்தப்பணம் செலுத்த வேண்டும்.

இன்னும் தெரிந்துகொள்ளவும், தனியார் நடத்துகின்ற:

- elementary and secondary schools (ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பள்ளிகள்)
- post-secondary schools (உயர்நிலைப் பள்ளிகள்)
- career colleges (தொழிற்பாதைக் கல்லூரிகள்)

சில தனியார் தொழிற்பாதை கல்லூரிகள் OSAP க்காக ஒப்புதல் பெற்றவையாகும் (பள்ளிக்கு கட்டணம் செலுத்துவதில் உதவுதல்). Find out if your school is approved (உங்கள்பள்ளி ஒப்புதல் பெற்ற பள்ளியா எனக் கண்டறியவும்).

---

# குழந்தைப் பராமரிப்பகம் கண்டறியவும்

ஒன்ட்டேரியோவில், 2 வகையான குழந்தைப் பராமரிப்பகங்கள் உள்ளன.:

1. உரிமம் பெற்றவை – அரசினால் ஒழுங்குமுறை செய்யப்படுபவை
2. உரிமம் பெறாதவை – அரசினால் ஒழுங்குமுறை செய்யப்படாதவை

உரிமம் பெற்ற  குழந்தைப் பராமரிப்பகங்களுக்கான இடங்களைப் பெறுவதற்கு காத்திருப்பு பட்டியல் இருக்கலாம், எனவே கூடிய விரைவில் இடம் தேடுவதைத் துவக்கவும்.

உங்கள் சமுதாயத்தினுள்ளாக உரிமம் பெற்ற குழந்தைப் பராமரிப்பகம் கண்டறியவும்

இவை பற்றி மேலும் அறியவும்:

- how to choose quality child care and questions to ask your child care provider (தரமான குழந்தைப் பராமரிப்பகத்தினை எப்படி தேர்ந்தெடுப்பது மற்றும் உங்களுக்கு குழந்தைப் பராமரிப்புச் சேவை அளிப்பவர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள்)
- all of the types of child care available to you (உங்களுக்கு கிடைக்கவிருக்கும் குழந்தைப் பராமரிப்பகங்களின் அனைத்து வகைகள்
- child care resources from Settlement.org (Settlement.org லிருந்து குழந்தைப் பராமரிப்புக்கான ஆதார வளங்கள்)

# உடல்நலப் பராமரிப்பு பெறவும்

**உங்களுக்கு ஒரு அவசர நிலை இருந்து** உங்களிடம் OHIP அட்டை இருக்கவில்லை என்றால், உங்கள் தொலைபேசியிலிருந்து, **911 என்ற எண்ணை அழைக்கவும்** அல்லது **மிக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் செல்லவும்.**

OHIP (ஒன்ட்டேரியோ உடல் ஆரோக்கியக் காப்பீட்டுத் திட்டம்) என்பது ஒன் ட்டேரியோவில் உடல் நலப் பராமரிப்புத் திட்டமாகும். இந்த OHIP மூலமாக, உங்களுக்கு தேவைப்படுகின்ற பல உடல் ஆரோக்கியச் சேவைகளுக்காக இந்த பிரதேச அரசு பணம் செலவழிக்கிறது.

OHIP யினால் அரவணைக்கப்படுகிறது என்பதை நிருப்பிக்கின்ற ஒன்ட்டேரியோ உடல் ஆரோக்கிய அட்டை ஒன்றுக்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். உங்கள் மருத்துவரை பார்க்கும் ஒவ்வொரு சமயத்திலும், ஒரு அவசர நிலை அறைக்கு செல்லும்போதும், ஒரு மருத்துவப் பரிசோதனையின்போதும் அல்லது ஒரு அறுவை சிகிச்சை

செய்யச் செல்லும்போதும் உங்கள் உடல் ஆரோக்கிய அட்டையை அவரிடம் காட்ட வேண்டும்

**பொதுவாகவே, ஒன்ட்டேரியோ உடல் ஆரோக்கியக் காப்பீட்டுத் திட்டத்தின் (OHIP) அரவணைப்பில் வருவதற்கு ஒரு மூன்று மாத காத்திருப்புக் காலம் இருக்கிறது.** இந்தக் காத்திருப்புக் காலத்தின்போது, உங்கள் உடல் ஆரோக்கியத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு தனியார் உடல் நலக் காப்பீடு இருப்பதை உறுதி செய்துகொள்ளவும்

பாதுகாக்கப்பட்ட நபர்கள் (பாதுகாப்பு தெவைப்படுகின்ற கன்வென்ஷன் அகதிகள் மற்றும் இதர நபர்கள்) இந்த மூன்று மாத கால காத்திருப்பிலிருந்து விலக்கு பெறுகிறார்கள்.

விண்ணப்பிப்பதற்கு:

1. ஒரு விண்ணப்பப் படிவம் பெறவும்:
   - online(**ஆன்லைனில்**)
   - **அல்லது** your local Service Ontario OHIP Office (**உங்கள் உள்ளூர் ஒன்ட்டேரியோ** OHIP **சேவை அலுவலகத்திலிருந்து**)
2. documents you need (**உங்களுக்குத் தேவையான ஆவணங்கள்**) **அனைத்தையும் சேகரிக்கவும்**
3. படிவத்தை நிரப்பி your local Service Ontario OHIP Office (**உங்கள் உள்ளூர் ஒன்ட்டேரியோ** OHIP **சேவை அலுவலகத்தில் நேரில் சேர்ப்பிக்கவும்**)

உங்களுக்குத் தேவையான ஆவணங்கள் அனைத்தும் உங்களிடம் வந்தவுடனேயே நீங்கள் விண்ணப்பிக்கலாம். இருப்பினும், நீங்கள் தகுதி அடையும் வரையில் – 3 மாத காத்திருப்புக் காலம் வரை - ஒரு உடல் ஆரோக்கிய அட்டையை நீங்கள் பெற மாட்டீர்கள்.

மறுகுடியமர்வு ஆன அகதிகள், மற்றும், மனிதாபிமான காரணங்களுக்காக மறு குடியமர்வு செய்யப்பட்ட இதர நபர்கள், ஒன்ட்டேரியுவுக்கு வந்து சேர்ந்தததவுடனேயே OHIP அரவணைப்புக்கு தகுதி பெறுவார்கள். அகதி நிலை கோருபவர்கள், பாதுகாக்கப்பட்ட நபர்கள், ஆள்கடத்தலுக்கு ஆளானவர்கள் மற்றும் OHIP க்கு தகுதிபெறாத சில நபர்கள் ஆகியோர் Interim Federal Health Program (IFH) (**இடைக்கால கூட்டமைப்பு உடல்**

ஆரோக்கியத் திட்டத்தின்) கீழாக ஓரளவுக்கேயான உடல் ஆரோக்கியப் பராமரிப்பு பெறுவார்கள்

இவை பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும்:

- how to apply for an Ontario health card (ஒரு ஒன்ட்டேரியோ உடல் நலப் பராமரிப்பு அட்டையைப்பெறுவது எப்படி)
- what services are covered by OHIP(எந்த மாதிரியான சேவைகள் OHIPயில் தரப்படுகின்றன)
- how to find a family doctor or nurse practitioner (குடும்ப மருத்துவர் அல்லது தொழில்முறை செவிலியை எப்படிக் கண்டறிவது)
- Mental Health Helpline (மன நல ஆரோக்கியத்திற்கான உதவிக்கரம்)
- buying private health insurance for immigrants, newcomers and visitors (குடியமர்ந்தவர்களுக்கு, புதிதாக வந்தவர்களுக்கு, பார்வையாளர்களுக்கு தனியார் உடல் ஆரோக்கியக் காப்பீட்டினை வாங்குவது)
- Health benefits under the Interim Federal Health Program – (கூட்டமைப்பு உடல் ஆரோக்கியத் திட்டத்தின் கீழாக உடல் ஆரோக்கிய பலன்கள்_
- https://www.canada.ca/en/immigration-refugees-citizenship/services/refugees/help-within-canada/health-care/interim-federal-health-program/services.html

## உங்களிடம் ஒரு OHIP அட்டை இல்லை என்றால்

உங்களிடம் தனியார் காப்பீடு இல்லை, ஆனால் காத்திருப்புக் காலமாகிய மூன்று மாதத்திற்கு முன்பாக நீங்கள் ஒரு மருத்துவரைப் பார்க்க வேண்டும் என்றால்:

- அது அவசர நிலைஎன்றால் 911 ஐ அழைக்கவும்
- அவசர நிலை இல்லாதவற்றுக்கு, தொடர்புகொள்ளவும்:
  - டெலிஹெல்த்-ஐ 1-866-797-0000 என்ற எண்ணில் கட்டணமில்லாமல் அழைத்து தொலைபேசி வழியாகவே மருத்துவ ஆலோசனை பெறவும்

- உங்கள் local Community Health Centre (உள்ளூர் சமுதாய உடல் ஆரோக்கிய மையம்), மூலமாக நீங்கள் உடல்நலச் சேவைகளை பெற முடியும்
- உடல் நலச் சேவைகளைக் கண்டறிவதில் உங்கள் சமுதாயத்தில் இருக்கின்ற a settlement agency (ஒரு குடியமர்வு செய்யும் ஏஜன்சி) உங்களுக்கு உதவக்கூடும்
- நீங்கள் அகதி நிலை கோரும் நபர் அல்லது ஆள்கடத்தலுக்கு ஆளானவர் என்றால் - apply for Interim Federal Health Program coverage (இடைக்கால கூட்டமைப்பு உடல் ஆரோக்கியத் திட்ட அரவணைப்புக்காக விண்ணப்பிக்கவும்) – https://www.canada.ca/en/immigration-refugees-citizenship/services/refugees/help-within-canada/health-care/interim-federal-health-program/apply.html
- நேரடியாக ஒரு மருத்துவகத்திற்குச் சென்று அங்கிருக்கும் சேவைகளை பணம் கொடுத்து பெறவும் (இந்த சேவைகளுக்கு செலுத்தும் பணம் திருப்பித் தரப்படமாட்டாது)

---

# ஓட்டுனர் உரிமம் பெறவும்

இன்னொரு பிரதேசம், மாநிலம் அல்லது நாட்டிலிருந்து கொடுக்கப்பட்ட, **செல்லத்தக்க ஒரு ஓட்டுனர் உரிமம் ஏற்கெனவே உங்களிடம் இருந்தால்,** அந்த உரிமத்தை நீங்கள் 60 நாட்களுக்கு உபயோகித்துக் கொள்ளலாம். 60 நாட்களுக்குப் பின்னர், நீங்கள் ஒன்ட்டேரியோ ஓட்டுனர் உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்..

வெளிப்பிரதேச உரிமத்தை மாற்றிக்கொள்ள விண்ணப்பிக்கவும்.

**செல்லத்தக்க ஒரு ஓட்டுனர் உரிமம் உங்களிடம் இல்லை ,** ஆனால் நீங்கள் இந்தப் பிரதேசத்தில் வாகனம் ஓட்ட விரும்புகிறீர்கள் என்றால், உங்களுக்கு குறைந்தது 16 வயதாகி இருக்க வேண்டும் மற்றும் ஒன்ட்டேரியோ ஓட்டுனர் உரிமம் வைத்திருக்க வேண்டும்:

- ஒரு கார், வேன் மற்றும்/அல்லது இலகுரக லாரி ஓட்ட விரும்பினால் ஒரு G கிளாஸ் உரிமம் வேண்டும்

- ஒரு மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் மற்றும்/அல்லது மொபெட் ஓட்ட விரும்பினால் ஒரு M கிளாஸ் உரிமம் வேண்டும்

புதிய ஓட்டுனர்கள் G கிளாஸ் ஓட்டுனர் உரிமம் பெறுதல் .

இது பற்றி மேலும் அறியவும்:

- getting a motorcycle licence (ஒரு மோட்டார் சைக்கிள் உரிமம் பெறுதல்)
- the Driver's Handbook, the guide to help you study for your written test (ஓட்டுனரின் கையேடு, இந்தப் புத்தகம் உங்களுக்கான எழுத்துத் தேர்வுக்கு படிப்பதற்காக உதவும்)
- what happens if you are convicted of breaking driving laws (வாகனம் ஓட்டும் விதிகளை மீறியதாக நீங்கள் தண்டிக்கப்பட்டால் என்னவாகிறது)

---

# போக்குவரத்து

## பொதுப் போக்குவரத்து

பொதுப் போக்குவரத்து என்பது பிரதேசத்தின் ஊடாக பெரும்பாலான நகரங்கள் மற்றும் பிராந்தியங்களில் கிடைக்கிறது. நீங்கள் இவற்றைத் தேர்ந்தெடுக்கலாம்:

- உள்ளூர் அல்லது பிராந்திய பேருந்துகள்
- மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கான போக்குவரத்து சேவைகள்
- ரயில்கள்
- தனியார் கோச் பேருந்துகள்
- ஸ்ட்ரீட்கார்ஸ் மற்றும்/அல்லது சப்வேக்கள்(டோரோன்ட்டோவில்)

பிரதேசத்தில் இருக்கின்ற பெரும்பாலான பொதுப் போக்குவரத்துக்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும். கட்டணமானது உங்கள் வயது, இருப்பிடம் மற்றும் சேருமிடத்தைப் பொருத்து வெவ்வேறாக இருக்கும்.

இது பற்றி மேலும் அறியவும்:

- transportation for seniors and people with short and long-term disabilities (முதியவர்கள் மற்றும் குறுகிய கால மற்றும் நீண்டகால இயலாமை கொண்டவர்களுக்கான போக்குவரத்து)
- public transit in your city/region (உங்கள் பிராந்தியத்தில் பொது போக்குவரத்து)
- GO Transit trains and buses (GO போக்குவரத்து ரயில்கள் மற்றும் பேருந்துகள்)
- VIA rail trains and schedules (VIA ரயில்வண்டிகள் மற்றும் கால அட்டவணை)

### பள்ளி சென்றுவருவதற்கான போக்குவரத்து

பள்ளிக்கு போய் வருவதற்காக உங்கள் குழந்தைக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்றால் Contact your local school board (உங்கள் உள்ளூர் பள்ளி வாரியத்தினைத் தொடர்பு கொள்ளவும்) .

---

## ஒரு அவசர நிலை எனும்போது யாரை அழைப்பது

**ஒரு அவசர நிலை என்றால், 911 ஐ அழைக்கவும்.**

கீழ்க்கண்டவை பற்றிய எச்சரிக்கை கொடுப்பதற்காக, ஒன்ட்டேரியோ பிரதேசமானது, அவசர நிலைக்கு தயாராக இருக்கும் நிலைக்கான அமைப்பினைக் கொண்டிருக்கிறது.:

- குளிர்கால புயல்
- இடியுடன் கூடிய புயல்
- காட்டுத்தீ
- சூறாவளி
- வெள்ளம்
- அதிகப்படியான வெப்பம்
- அணு ஆயுத அவசர நிலைகள்
- தொற்று நோய் பரவுதல்
- நில நடுக்கங்கள்

ஒரு அவசர நிலையின்போது Sign up for email and text alerts (மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்திக்காக பதிவு செய்யவும்).

how to prepare for an emergency (ஒரு அவசர நிலைக்கு தயாராவது எப்படி) என்பது பற்றி தெரிந்துகொள்ளவும்.